மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

அரசு ஊழியர்களுக்கு பேருந்துகளில் இலவசச் சீட்டுகள்.

* 553 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

அரசு பேருந்து வண்டிகளில் செல்லுவதற்காகச் சென்னை நகரில் சர்க்கார் ஊழியர்களுக்கு இலவசச் சீட்டு (free pass) வழங்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : சர்க்கார் ஊழியர்களுக்கு இப்படி இலவசச் சீட்டு கொடுப்பதில் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டமாகும் ? இதை மீண்டும் பரிசீலனை செய்து இலவசப் பாஸ் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த இலவசப் பாஸ்கள் கொடுப்பதில் எவ்வளவு நஷ்டம் என்ற பிரச்சினை எழவில்லை. 1967-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் ஒரு மனு கொடுத்தார்கள். அதில் இலவச பாஸ், அல்லது அதற்குப் பதிலாக போக்குவரத்து படி ரூ. 10 என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இங்கு செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிறபடி, நகரப்படி, அகவிலைப்படி இவை கொடுத்து விட்டபடியால் இலவச பாஸ் கொடுக்கிற பிரச்சினை மீண்டும் எழவில்லை.

கோயில்களிலிருந்து சிலைகள் களவு.

* 547 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டில் கோயில்களிலிருந்து களவுபோன சிலைகள் எத்தனை ?

(இ) அதன் காரணமாக வழக்குகள் தொடரப்பெற்றனவா ?

(உ) ஆம் எனில், எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன, எத்தனை வழக்குகள் தோல்வியுற்றன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) 77.

(இ) ஆம். 12 வழக்குகள் தொடரப்பட்டன.

(உ) 11 வழக்குகள் வெற்றிபெற்றன. 1 முடிவு பெறவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : திருட்டுப்போன சிலைகள் எந்தக் கடவுள் களுக்குச்சொந்தமானவை ? இனிமேல் இந்தக் கடவுள்களைக் காப்பாற்று வதற்காக தனியாக ஒரு போலீஸ் படையை அமைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: நாற்பது கோவில்களில் சிலைகள் திருடு போயிருக்கின்றன. அவை மாவட்டவாரியாக இருக்கின்றனவே தவிர, எந்தெந்த சாமிகள் என்பது பற்றி தகவல் இல்லை. இது சம்பந்த மாக தனியாக ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் போட்டு புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : அடிக்கடி சாமி கோவில்களில் சாமி விக்கிரகங்கள், சாமியின் நகைகள் இவை பல்வேறாக திருடு போய்க் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலிலும் பல வகைப்பட்ட சாமிகள் இருக்கின்றன. சாமிகளுக்குள்ளேயே சாமிகள் திருட்டுப்

போகிறதா, கோர்ட்டுக்குப் போகிறபோது சாமிகள் மீது வழக்குப் போடப்படுகிறதா அல்லது அவர்கள் சாட்சிக்கு அழைக்கப்படுகின்றனரா என்ற விவரத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அது சம்பந்தமான தகவல இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : சிலைகள் திருட்டுப் போவதாகச் சொன்னார்கள். இந்தச் சிலைகள் திருட்டுப்போவது அதன் உலோகங்களுக்காகத் திருட்டு போகிறதா அல்லது வெளிநாடுகளில் புராதன சிற்பங்களைச் சேகரிக்கிறவர்கள் அதிக விலைக்கு வாங்கிச் சேர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள், ஆகவே அதன் காரணமாகத் திருடு போகிறதா? எந்த நோக்கத்தோடு இவை திருடப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பல்வேறாகப் பேசப்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், திருடுபோவது எதற்காக என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தானம்.

*** 554 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தாவின் மீது செய்யப்பட்ட புகார் எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது குறித்து சென்னை, இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளர் 27—11—1968 தேதியன்று விசாரணை ஒன்றை நடத்தினார். ஸ்ரீ பூமீஸ்வரர் கோவிலின் பரம்பரை அறங்காவலர் கோயில் அலுவல்களைச் சரியான முறையில் நிர்வகித்து வராததன் காரணமாக கோயில் பணி ஒழுங்காக நடைபெறுவது தடைப்பட்டது. எனவே, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ் ஆணையாளர் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமித்தார். கோயிலின் பொறுப்பு, பதிவேடுகள் முதலியவற்றைப் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் பரம்பரை அறங்காவலருக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, அந்தப் பரம்பரை அறங்காவலர் அவர்கள் நீண்ட நாட்களாக அங்கேயிருந்து வந்ததன் பேரில் நிறைய பணம் கையாடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்து வருவதும், அதன் காரணமாக ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர் பேரிலே புகார் செய்யப்பட்டு அந்தப் புகாரை விசாரிப்பதற்கு அவர் முன்னால் அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்ற அந்தக் காரணத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுவதும் உண்மையா ? இப்பொழுதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அவர் மீது என் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்கு என்னிடத்தில் தகவல் இல்லை. ஆனால் அவர் பரம்பரை அறங்காவலராக இருந்து கோவில் சரியானபடி நிர்வகிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்காக ஒரு அதிகாரியையும் அந்தக் கோயிலுக்கு நியமனம் செய்து உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு யூனிட் மின்சாரத்தின் அடக்க விலை.

*** 548 வினா.—திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலை என்ன ?